1975 ஏப்ரல் 11]

துவக்கப்பட வேண்டுமென்ற கருத்து மத்திய அரசின் ஆலோசனை யில் இருந்தது. ஆனுல், மத்திய அரசு அந்தத் திட்டத்தை அடியோடு கைவிட்டுவிட்டு, உயர்த்துவதற்குப் பணம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது அப்படி ஒரு திட்டம் வர வாய்ப்பு இல்லை. அடுத்து, டிஸ்பென்சரி ஏற்படுத்துவது என்ருல், அது ஒன்றியத்தின் மூலமாக நடைபெறவேண்டும். அது ஆர்.டி.ஒ. மூலமாக வந்து ஒப்பம் அளிக்கப்படவேண்டும். தனியாக எழுதி அனுப்பினுல், ரூரல் டெவலப்மென்ட் துறையும் மருத்துவத் துறையும் ஆலோசித்து அதற்கு அனுமதி அளிக்கக் கூடிய வாய்ப்பு வட்டாரத்தில் வருமானுல் ஒத்துக்கொள்வார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கிள்ளியூர் ஒன்றியத்தின் ஹெட்குவார்ட்டர்ஸ் தொலையாவெட்டை என்ற பகுதி யில் அமைந்திருக்கிறது. இந்த ஒன்றியம் மக்கள் அதிகமாக வாழும் பகுதி. ஆகவே, தொலையாவெட்டை பகுதியில் புதிய மருத்துவ மனையையோ அல்லது கூடுதல் டிஸ்பென்சரியையோ ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போது தொலையாவெட்டையில்தான் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. (Health Centre at Tholyavetty in Killiyoor Panchayat Union) என்றுதான் எழுதியிருக்கிறது. அங்கு இருப்பதாகத்தான் கேள்விக்குப் பதில் இருக்கிறது. தொலையாவெட்டையில் இல்லை யென்று சொன்னுல் என்ன செய்யலாம் என்று தனியாகப் பரிசீலிக் கலாம்.

கும்பகோணம்-சீர்காழி சாலை

* 647 வினு.— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

மாயூரம் நகரில் உள்ள கும்பகோணம்-சீர்காழி நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

Causeway near Sulagiri

*648 *Q*.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon, the Minister for Public Works be pleased to state whether the work relating to the construction of the causeway over the jungle stream near Sulagiri in Hosur taluk has been completed?

---

*455—ம் பக்கத்தில் மாண்புமிகு அமைச்சர் இவ்விடையைத் திருத்தி அளித்த அறிக்கையைக் காண்க.